# அப்துல் கலாம் உரைகள்

## அக்டோபர் 2015




முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்கள் ஈரோடு புத்தகத் திருவிழாவிற்கு இரண்டு முறை ( 2009 மற்றும் 2014 ) வருகைபுரிந்து மிகச்சிறந்த உரைகளை நிகழ்த்தியுள்ளார். மேதகு கலாம் அவர்களின் இந்த இரண்டு உரைகளின் தொகுப்பே இந்நூல். புத்தகங்களின் முக்கியத்துவத்தையும், இல்லந்தோறும் நூலகம் உருவாக வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் விதத்தில் இவ்வுரைகள் அமைந்துள்ளன.

பல்லாயிரம் மக்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் நிகழ்த்தப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விரண்டு உரைகளை த. ஸ்டாலின் குணசேகரன் தொகுத்துள்ளார். 46 பக்கங்கள் கொண்ட இந்நூலை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நூல் ஈரோடு நகரில் தன்னாட்சிக் கல்லூரியாக இயங்கும் கொங்கு கலை மற்றும்

அறிவியல் கல்லூரியில் பயிலும் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பாட நூலாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் விலை ரூ 40.00 ஆகும்.